# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:127 ★07.09.2026 ★தமிழ் நாளிதழ் ★திங்கட்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:127 ★07.09.2026 ★TamilDaily ★Monday ★Page-4 ★Price-₹5/- Chennai



**தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


# "தேசிய நெடுஞ்சாலை அருகே கட்டடம் கட்டுவோருக்கு அதிர்ச்சி செய்தி" உச்ச நீதிமன்றத்தின் புதிய 'செட் பேக்' விதியால் பொதுமக்கள் தவிப்பு

தேசிய நெடுஞ்சாலைகளில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் விபத்துகளை தடுக்கும் நோக்கிலும், எதிர்கால சாலை விரிவாக்கத்தை கருத்தில் கொண்டும் உச்ச நீதிமன்றம் மற்றும் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இணைந்து புதிய கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. நாடு முழுமைக்கும் பொருந்தக்கூடிய இந்த வழிகாட்டுதல்களின்படி, இனி தேசிய நெடுஞ்சாலைகளுக்கு அருகில் கட்டப்படும் புதிய கட்டடங்களுக்கு கடுமையான அமைவிட இடைவெளி தூரம் (SETBACK DISTANCES) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய கட்டுப்பாடுகளின்படி, தேசிய நெடுஞ்சாலையின் மையக் கோட்டிலிருந்து (CENTRE LINE) கணக்கிடப்பட்டு வீடுகள் மற்றும் வணிக கட்டடங்களுக்கான தூரம் வரையறுக்கப்பட்டுள்ளது. குடியிருப்பு வீடுகளை பொறுத்தவரையில், சாலையின் மைய கோட்டிலிருந்து குறைந்தபட்சம் 40மீட்டர் (சுமார் 131 அடி) தள்ளி மட்டுமே புதிய கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதேபோல் கடைகள், ஹோட்டல்கள், ஷோரூம்கள் மற்றும் வணிக வளாகங்களை பொறுத்தவரை, மைய கோட்டிலிருந்து 75 மீட்டர் (சுமார் 246 அடி) இடைவெளி விட்டு மட்டுமே கட்டடங்களை அமைக்க அனுமதி வழங்கப்படும். பொதுவாக ஒரு தேசிய நெடுஞ்சாலைக்கு அரசு கையகப்படுத்தும் எல்லை பகுதி (RIGHT OF WAY) என்பது சுமார் 45 மீட்டர் அகலம் கொண்டதாகும். அதாவது சாலையின் மைய கோட்டிலிருந்து இருபுறமும் தலா 22.5 மீட்டர் தூரம் அரசின் சாலைப் பகுதியாகவே சென்றுவிடுகிறது. உச்ச நீதிமன்றத்தின் இந்த புதிய உத்தரவின்படி 40 மீட்டர் தூரம் தள்ள வேண்டும் என்றால், அரசின் சாலை எல்லை முடிந்த பிறகும், ஒரு நில உரிமையாளர் தன் சொந்தப் பட்டா நிலத்தில் மேலும் சுமார் 57 அடி தூரத்திற்கு எவ்வித கட்டுமானமும் செய்ய முடியாது. வணிக கட்டடங்களுக்கு 75 மீட்டர் தூரம் என்பதால், சாலை எல்லை முடிந்து சுமார் 172 அடி தூரத்திற்கு தன் சொந்த நிலத்தை சும்மா விட்டு விட்டு அதற்கு பிறகே கட்டடம் கட்ட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த இடைவெளி எல்லைக்குள் கட்டப்படும் புதிய கட்டுமானங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளோ அல்லது நகரமைப்பு குழுமங்களோ (DTCP) அனுமதி வழங்கக் கூடாது எனவும், விதிகளை மீறி அமைக்கப்படும் கட்டுமானங்கள் எந்த வித இழப்பீடும் இன்றி இடிக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. சமீபகாலமாக அமைக்கப்பட்டு வரும் புதிய பைபாஸ் சாலைகளை ஒட்டி 5 சென்ட், 10 சென்ட் அல்லது குறுகிய அகலத்தில் பட்டா நிலம் வைத்திருக்கும் ஏழை மற்றும் நடுத்தர மக்கள், இந்த புதிய விதியால் தங்களின் சொந்த நிலத்திலேயே வீடோ அல்லது சிறிய கடையோ கட்ட முடியாத நிலை உருவாகியுள்ளது. சாலை பாதுகாப்பு மற்றும் பொதுமக்களின் உயிரை பாதுகாப்பது மிக அவசியமானது என்றாலும், மக்கள் அடர்த்தி அதிகம் உள்ள பகுதிகளிலும் பைபாஸ் எல்லைகளிலும் வாழும் சாமானியர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு இந்த விதிகளில் உரிய தளர்வுகளை வழங்க வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் முக்கிய கோரிக்கையாக உள்ளது. எனவே, பொதுமக்களும் புதிய நிலங்களை வாங்குவதற்கு முன்போ அல்லது கட்டட அனுமதியை பெறுவதற்கு முன்போ தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் இந்த தூரக் கட்டுப்பாடுகளை தீர விசாரித்து அறிந்து செயல்படுவது மிகவும் அவசியமாகும்.

## கூட்டுறவுத் துறை அமைச்சர் வ.காந்திராஜ் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்பணர்வு முகாமினை தொடங்கி வைத்தார்

கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.வ.காந்திராஜ் அவர்கள் இன்று (05.09.2026) அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமினை தொடங்கி வைத்தார்.

இம்முகாமில் சிறந்த கால்நடை வளர்ப்பு முறைகளை பின்பற்றும் மூன்று விவசாயிகளுக்கு விருதுகளும், கிடேரி கன்று பேரணி நடத்தி சிறந்த மூன்று கன்று உரிமையாளர்களுக்கு பரிசுகளும், கால்நடைகளுக்கானதாதுஉப்புக்கலவை உள்ளிட்டவற்றை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன் இ.ஆ.ப. அவர்கள் தலைமை தாங்கினர்.

இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து கிராமங்களில் கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் நடப்பு 202627 ஆம் ஆண்டிற்கு சிறப்பு சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்திட தமிழ்நாடு அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது.


இப்பணிகளை முன்னேற்புவிதமாக நடப்பாண்டிற்கு செப்டம்பர் 2026 முதல் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 18 முகாம்கள் வீதம் 7 ஊராட்சி ஒன்றியங்களில் 126 முகாம்கள் நடத்தப்பட உள்ளது. முகாம்களில் பங்குபெறும் கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தல், குடற்புழு நீக்கம் செய்தல், நோய்களுக்கு எதிரான தடுப்பூசி போடுதல், ஆண்மை நீக்கம். மலடு நீக்க சிகிச்சைகள், செயற்கைமுறை கருவூட்டல், சினைப்பரிசோதனை, சுண்டுவாத அறுவை சிகிச்சை, நோய் தடுப்பு மற்றும் நோய் தீர்க்கும் பல்வேறு சுகாதார நடவடிக்கைகள் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு இலவசமாக கால்நடை மருத்துவக் குழு மூலம் மேற்கொள்ளப்படும்.

மேலும் கால்நடை பராமரிப்புத்துறை வழியாக நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்தும், கால்நடை வளர்ப்பில் உண்டாகும் சந்தேகங்களுக்கும் முகாமில் பங்கேற்கும் கால்நடை வல்லுநர்களிடமிருந்து விளக்கம் பெறலாம். இம்முகாம்களில் சிறந்த கால்நடை வளர்ப்பு முறைகளை பின்பற்றும் மூன்று விவசாயிகளுக்கு விருதுகளும், கிடேரி கன்று பேரணி நடத்தி சிறந்த மூன்று கன்று உரிமையாளர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படவுள்ளது. எனவே, இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகள் தங்களது கால்நடைகளுடன் இம்முகாம்களில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.வ.காந்திராஜ் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்கங்களை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மரு.வெங்கடேசன் (பொறுப்பு). உதவி இயக்குநர் மரு.திருநாவுக்கரசு, வருவாய் கோட்டாட்சியர் திரு. ரமேஷ், வட்டாட்சியர் திருமதி. வரலட்சுமி, கால்நடை மருத்துவர்கள் மரு. சத்யா, மரு.சுமித்ரா, மரு.கௌரி சங்கர், மரு.லட்சுமணன், மரு.இளவழகன், கால்நடை ஆய்வாளர்கள் திரு.தேவராஜ், திருமதி.மங்களச் செல்வி, கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் கலந்து கொண்டனர்.





பழனியில் வ.உ.சிதம்பரனாரின் நினைவு தினத்தையொட்டி, பழனி வ உ சி பேருந்து நிலைய வளாகத்தில், வ உ சியின் திருவுருவப்படத்திற்கு. தமிழக வெற்றி கழக மாவட்ட செயலாளர் கார்த்தி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.நிகழ்ச்சியில் த.வெ.க நிர்வாகி பழனிபாலன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மகளிர் அணி மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

## பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு அனுமதி விவகாரம்: திருவண்ணாமலையில் ஆட்டோ ஓட்டுநர்கள் திடீர் சாலை மறியல்

### 100க்கும் மேற்பட்டோர் போராட்டம்; மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளிக்க முயன்றதால் பரபரப்பு

திருவண்ணாமலை, செப். 7

திருவண்ணாமலை திண்டிவனம் சாலையில் கடந்த 3 மாதங்களுக்கும் மேலாக செயல்பட்டு வரும் புதிய பேருந்து நிலையத்தில், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு இடையேயான பிரச்சினை காரணமாக நேற்று திடீர் பரபரப்பு ஏற்பட்டது.

திருவண்ணாமலைக்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், சுற்றுவட்டார கிராமங்களில் இருந்தும் தினமும் ஏராளமான பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் வந்து செல்கின்றனர். புதிய பேருந்து நிலையத்திலிருந்து கிரிவலம் செல்லவும், அண்ணாமலையார் கோவிலுக்கு செல்லவும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு செல்லவும் மினி பேருந்துகள் மற்றும் ஆட்டோக்களை பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

புதிய பேருந்து நிலையம் அருகே பல ஆண்டுகளாக சீனிவாசன் நினைவு ஆட்டோ ஓட்டுநர்கள் நலச்சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்த சங்கத்தைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர்கள், அந்த பகுதியில் வாடகைக்கு ஆட்டோக்களை இயக்கி வருகின்றனர்.

இந்நிலையில், புதிய பேருந்து நிலையத்தில் பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் ஆட்டோ இயக்க அனுமதி வழங்க வேண்டும் எனக் கோரி மாவட்ட நிர்வாகத்திடம் மனு அளிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து, திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலர் நேற்று புதிய பேருந்து நிலையத்திற்கு நேரில் வந்து, சம்பந்தப்பட்ட ஆட்டோ ஓட்டுநர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த பேச்சுவார்த்தை

பேச்சுவார்த்தையின்போது இருதரப்பு ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவியது. பின்னர், பேச்சுவார்த்தைக்கு எதிர்ப்பு தெரிவித்த 100க்கும் மேற்பட்ட ஆட்டோ ஓட்டுநர்கள் திடீரென புதிய பேருந்து நிலையம் அருகே சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

சாலையில் தேங்கிய பேருந்துகள்

ஆட்டோ ஓட்டுநர்கள் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டதால், புதிய பேருந்து நிலையத்திற்குள் செல்ல வேண்டிய பேருந்துகள் சாலையிலேயே நீண்ட நேரம் காத்திருந்தன. இதனால் அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன், பொதுமக்களும் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர்.

இதற்கிடையே, போராட்டத்தில் ஈடுபட்ட ஆட்டோ ஓட்டுநர்களில் ஒருவர் திடீரென தனது உடலில் மண்ணெண்ணெயை ஊற்றி தீக்குளிக்க முயன்றதாக கூறப்படுகி றது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த சக ஆட்டோ ஓட்டுநர்கள் உடனடியாக அவரை தடுத்து நிறுத்தினர்.



இதனால் புதிய பேருந்து நிலையம் பகுதியில் சிறிது நேரம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பான விவகாரத்தில் இருதரப்பினரிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு மாவட்ட நிர்வாகம் உரிய முறையில் தீர்வு காண வேண்டும் என்றும், பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் ஆட்டோ சேவை தொடர்ந்து நடைபெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்துள்ளது.

## செப்.9 முதல் முதலமைச்சர் கோப்பை மாவட்ட விளையாட்டு போட்டிகள்: முன்பதிவு செய்த வீரர்-வீராங்கனைகள் பங்கேற்க கலெக்டர் வந்தனா கார்க் அழைப்பு

திருவண்ணாமலை, செப். 7

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்படும் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2026, திருவண்ணாமலை மாவட்டத்தில் வரும் செப்.9 முதல் செப்.26ம் தேதி வரை மாவட்ட அளவில் நடைபெற உள்ளன. மாணவ–மாணவிகள், இளைஞர்கள், அரசு ஊழியர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுப்பிரிவினரை விளையாட்டுத் துறையில் ஊக்குவிக்கும் நோக்கில் நடத்தப்படும் இப்போட்டிகளில், திறமையான விளையாட்டு வீரர்–வீராங்கனைகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு உரிய அங்கீகாரமும் ஊக்கமும் வழங்கப்பட உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் வெளியிட்டுள்ள தகவலில், மாவட்ட அளவிலான போட்டிகள் செப்.9 முதல் 26ம் தேதி வரை நடைபெற உள்ளதாக தெரிவித்துள்ளார்.

பல்வேறு விளையாட்டுகளில் போட்டிகள்

திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு அரங்கில் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, சிலம்பம், கையுந்துபந்து, நீச்சல், ஸ்பீடு ஸ்கேட்டிங், எறிபந்து, இறகுப்பந்து, கைப்பந்து, பால்பேட்மிண்டன், சதுரங்கம், கேரம், டேபிள் டென்னிஸ் மற்றும் யோகாசனம் உள்ளிட்ட போட்டிகள் நடைபெற உள்ளன. அதேபோல், கோகோ, கபடி மற்றும் கிரிக்கெட் போட்டிகள் மாவட்ட காவல் ஆயுதப்படை மைதானத்தில் நடத்தப்பட உள்ளன.

ஆவணங்கள் கட்டாயம்

போட்டிகளில் பங்கேற்கும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ–மாணவிகள் தங்களது அடையாள அட்டை அல்லது Bonafide சான்றிதழ், ஆதார் அட்டை நகல் மற்றும் வங்கிக் கணக்குப் புத்தக நகல் ஆகியவற்றை கட்டாயம் கொண்டு வர வேண்டும். அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தங்களது அடையாள அட்டை, ஆதார் நகல் மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தை கொண்டு வர வேண்டும். பொதுப்பிரிவினர் ஆதார் நகல் மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

காலை 8 மணிக்குள் வர வேண்டும்

போட்டிகளில் முன்பதிவு செய்துள்ள வீரர்–வீராங்கனைகள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட போட்டி நடைபெறும் நாளில் காலை 8 மணிக்குள் போட்டி நடைபெறும் இடத்திற்கு வந்து சேர வேண்டும். அதன்பிறகு வருபவர்கள் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், போட்டியாளர்கள் முறையான விளையாட்டு சீருடையில் வர வேண்டும். குறிப்பிட்ட அமைப்பு அல்லது நிறுவனத்தை அடையாளப்படுத்தும் வகையிலான சீருடைகளை அணிந்து வர அனுமதி இல்லை. மாவட்ட அளவிலான போட்டிகள் நடைபெறும் இடங்கள் உத்தேசமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், போட்டிகளை சிறப்பாகவும் முறையாகவும் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, ஏற்கனவே முன்பதிவு செய்துள்ள அனைத்து விளையாட்டு வீரர்–வீராங்கனைகளும் உரிய ஆவணங்களுடன் தவறாமல் கலந்து கொண்டு, 2026ம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை சிறப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.

### தூத்துக்குடி புறநகர் மாவட்டம் ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றியத்தில் கட்சி வளர்ச்சிக்காக

## சிறப்பாக மக்கள் பணி செய்து வரும் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆறுமுக கிருஷ்ணனுக்கு மாவட்ட செயலாளரும் அமைச்சருமான மதன் ராஜா, தவெக 100 நாள் சாதனை பொதுக்கூட்டத்தில் சால்வை அணிவித்து பாராட்டினார்

தூத்துக்குடி,செப் 7

தமிழக வெற்றி கழக தலைவரும் தமிழக முதலமைச்சருமான ஜோசப் விஜய் ஆணைக்கேற்ப தூத்துக்குடி புறநகர் மாவட்டம் சார்பில் ஓட்டப்பிடாரம் கனி மஹாலில் நடந்த தவெக 100.நாள் சாதனை கூட்டத்தில் ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றியத்தில் தவெக சார்பில் சிறப்பாக மக்கள் பணி செய்து வரும் ஒன்றிய செயலாளர் ஆறுமுக கிருஷ்ணனுக்கு தூத்துக்குடி புறநகர் மாவட்ட செயலாளரும் சிறுகுறு தொழில்துறை அமைச்சருமான மதன் ராஜா சால்வை அணிவித்து பாராட்டு, ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றியத்தில் தூத்துக்குடி புறநகர் மாவட்ட செயலாளரும் தமிழக சிறு குறு தொழில்துறை அமைச்சருமான மதன் ராஜா ஆலோசனை கேற்ப்ப விரைவில் வரஇருக்கின்ற உள்ளாட்சி மன்ற தேர்தலில் ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அனைத்து உள்ளாட்சி பதவிகளையும் தவெக சார்பில் கைப்பற்றும் வகையில் தவெக நிர்வாகிகளுடன் ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றியத்துக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கட்சி வளர்ச்சிக்கான பணிகளையும் மக்கள் நலப் பணிகளையும் சிறப்பாக செய்து வருகிறார் ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆறுமுக கிருஷ்ணன், என்பது குறிப்பிடத்தக்கது





தூத்துக்குடி புறநகர் மாவட்டத்தின் சார்பில் நடைபெற்ற தவெக கட்சியின் 100 நாள் சாதனை பொதுக்கூட்டத்தில் ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றியதவெகநிர்வாகிகளான இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை நிர்வாகிகள் கிளை கழக நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்

## வாலாஜாபேட்டை நகராட்சியில் நகராட்சி நிர்வாக துணை இயக்குநர் திடீர் ஆய்வு

வாலாஜாபேட்டை, செப். 7

வாலாஜாபேட்டை நகராட்சியில் நகராட்சி நிர்வாக துணை இயக்குநர் மருத்துவர் இளங்கோவன் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணிகள் குறித்து விரிவாக ஆய்வு செய்தார்.

அணைக்கட்டு சாலையில் உள்ள நுண் உர செயலாக்க மையங்களை நேரில் பார்வையிட்டு, மையத்திற்கு தினசரி வர வேண்டிய திடக்கழிவின் அளவு, உண்மையில் வரப்பெறும் கழிவின் அளவு மற்றும் கழிவுகள் முறையாக கையாளப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், அங்கு பணிபுரியும் பணியாளர்களிடம் மையத்தில் செயல்படும் அரைக்கும் இயந்திரங்கள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்தும் கேட்டறிந்தார், மேலும் இங்கு உற்பத்தியாகும் உரங்களை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.



இதனை தொடர்ந்து, வாலாஜாபேட்டை நகராட்சிக்குட்பட்ட கரிக்கல் சுடுகாட்டில்உள்ளகுப்பை கொட்டும் இடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அங்கு மக்கும் கழிவுகள் மற்றும் பிளாஸ்டிக் உள்ளிட்ட கழிவுகளை கொட்டக்கூடாது என்றும், மழைநீர் வடிகால் பணிகளில் இருந்து அகற்றப்படும் மண் கழிவுகள் மட்டும் உரிய முறையில் கொண்டு வந்து கொட்டப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணக் கழிப்பிடத்தையும் ஆய்வு செய்தார். நகராட்சி நிர்ணயித்துள்ள கட்டணத்தையே ஒப்பந்ததாரர்கள் பொதுமக்களிடம் வசூலிக்க வேண்டும் என்றும், கழிப்பிடம் எப்போதும் தூய்மையாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ள நிலையில், ஆங்காங்கே டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், டெங்குதடுப்பு பணியாளர்கள் மற்றும் நகராட்சி நிர்வாகத்தினர் தொடர்ந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட வேண்டும் என அறிவுறுத்தினார். குறிப்பாக, தேவையான இடங்களில் புகை மருந்து அடித்தல், குடியிருப்பு பகுதிகளில் தண்ணீர் தேங்காமல் தடுப்பது மற்றும் கொசுப்புழு உற்பத்தியை கட்டுப்படுத்துவது உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

மேலும், பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரில் குளோரின் அளவு தினசரி முறையாக பரிசோதிக்கப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட அளவில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது வேலூர்நகராட்சி மண்டல இயக்குநர் லட்சுமி, வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையாளர் மேகலா, நகராட்சி பொறியாளர் சண்முகம் மற்றும் சுகாதார ஆய்வாளர் தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட நகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பழனி பஸ் நிலையம் மயில் ரவுண்டானா அருகே

## வ உ சி மன்றம் சார்பில், சுதந்திரப் போராட்ட தியாகியின் 155 ஆவது பிறந்தநாள் விழா

பழனி,செப்.7

பழனி பஸ் நிலையம் மயில் ரவுண்டானா அருகே வ உ சி மன்றம் சார்பில், சுதந்திரப் போராட்ட தியாகியின் 155 ஆவது பிறந்தநாள் விழா நடைபெற்றது. முன்னதாக வ உ சி யின் திரு உருவப்படத்திற்கு சித்தநாதன் சன்ஸ் எஸ். ஜி.சிவனேசன் தலைமையில், மலர் தூவி மரியாதை செய்தனர்.



வ உ சி மன்ற தலைவர் எஸ்பிஅசோக்பெருமாள், செயலாளர் சுப்பிரமணி, பொருளாளர் சுந்தர், நிர்வாகிகள் குகன், சுவாமி விலாஸ் முருகேசன், குமார், வ உ சி மகளிர் அணி இந்திரா திருநாவுக்கரசு, சுராங்கனி கணேசன், துர்கா கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் சரவண பொய்கை கந்த விலாஸ் என் பாஸ்கரன், வள்ளுவர் தியேட்டர் செந்தில்குமார், பேச்சியம்மாள் ரைஸ் மில் சுப்பிரமணி, சேவா தளம் சுந்தரம் பிள்ளை, கவுன்சிலர் துரை செல்ல பாண்டியன், ராமநாதகிருஷ்ணன், கிருஷ்ணா ஜூவல்லரி ஐயப்பன், ஒர்க் ஷாப் பாலு, முனிசாமி, கோல்டன் கல்வி நிறுவனம் மாசிலாமணி, அடிவாரம் சோழிய வேளாளர் சங்க கார்த்தி, சண்முகவேல் மண்டபம் ரவிசந்திரன், ஆயக்குடி சிவலிங்கம், புவனேஸ்வரன், மீனாட்சி ராஜன், மிராஸ் சிவகுமார், திருநாவுக்கரசு, அதிமுக ஐடி விங்க் குகன், வாட்டர் பாலசுப்பிரமணி, பீட்டர், ஆடிட்டர் கார்த்திகேயன், பால சமுத்திரம் முருகானந்தம், வேதகிரி மெடிக்கல் ரவி, கமலம் ஹோட்டல் சுப்புராஜ், பாலகிருஷ்ணன், டெய்லர் சுப்பிரமணி, ஆர் எம் டி சி கதிர்வேல், மீனம் சிவகுமார், சரண்ராஜ், சுவாமி விலாஸ் வரிஸ்குமார்முருகேஸ், பேன்சி பாலு, நோட்டரி வழக்கறிஞர் செந்தில் குமார், டெய்லர் பாலு, உட்பட ஏராளமான கலந்து கொண்டனர்



ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகரத்தில் நடைபெற்ற கிருஷ்ண ஜெயந்தி திருவிழாவில் மாவட்ட வணிகர் சங்க தலைவர் பொன் கூ சரவணன் அவர்கள் உரியடி நிகழ்வில் கலந்து கொண்டார். உடன் இளைஞர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம்

இராணிப்பேட்டை, செப்.7

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் 07.09.2026 திங்கட்கிழமை அன்று மாலை 4.00 மணி அளவில் மாவட்ட அவைத்தலைவர் A.K.சுந்தரமூர்த்தி அவர்களின் தலைமையிலும், தலைமை கழக பிரதிநிதிகள் மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் திரு.T. செங்குட்டுவன் மற்றும் தலைமை கழக தணிக்கைகுழு உறுப்பினர். வழக்கறிஞர் A.சரவணன் அவர்களின் முன்னிலையிலும் பாரதிநகர், சிப்காட், ஜீ.கே. மில்லினியா ஹோட்டலில் கூட்டம் நடைபெறும்.

எனவே, இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள். தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள்,



சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆர். காந்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

பொருள்:

1. தலைமைக் கழக மறுசீராய்வு குறித்து!

2. செப்15 அண்ணா அறிவாலத்தில் நடைபெறும் கழக முப்பெரும் விழா குறித்து!

3. கழக ஆக்கப்பணிகள்

## ஆவடி காவல்துறையினருக்கு "அன்பான அணுகுமுறை" பயிற்சி

ஆவடி, செப்டம்பர் 07:

ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் அறிவுறுத்தலின்பேரில், 02.09.2026 முதல் 05.09.2026 வரை நான்கு நாட்கள், ஆவடி காவல் ஆணையரகத்தில் பணிபுரியும் இரண்டாம் நிலை காவலர்கள் முதல் உதவி ஆய்வாளர்கள் வரை மற்றும் காவல் நிலையங்களில் பணிபுரியும் வரவேற்பாளர்களுக்கு ஐந்து இடங்களில் "அன்பான அணுகுமுறை" தொடர்பான பயிற்சி வகுப்புகள்சிறப்புவிரிவுரையாளர்கள்மூலம்நடத்தப்பட்டன.

இப்பயிற்சியில், ஆவடி காவல் ஆணையரகத்தைச் சேர்ந்த 3,045 போலீசார்மற்றும்காவல்நிலைய வரவேற்பாளர்களுக்கு பொதுமக்களிடம் கனிவான, மரியாதையான மற்றும் மனிதநேயத்துடன் கூடிய அணுகுமுறையை ஏற்படுத்தும் வகையில், சக மனித உறவுகள் மற்றும் உணர்ச்சி மேலாண்மை குறித்தும், பொதுமக்களிடம் எவ்வாறு சிறந்த அணுகுமுறையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.



காவல் நிலையத்திற்கு புகார் அளிக்க வரும் பொதுமக்களின் குறைகளை எவ்வித பாகுபாடுமின்றி கவனமாகக் கேட்டறிந்து, அவர்களுக்கு உரிய விளக்கங்களை வழங்கி, சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு விரைவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

மேலும், அவசரநிலை, குடும்பப் பிரச்சினைகள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களிடம் மனிதநேயத்துடன் அணுகி, அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

திருமுல்லைவாயல் எஸ்.எம். நகர் போலீஸ் கன்வென்சன் சென்டரில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்பில், ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார், காவல் துணை ஆணையாளர் வனிதா, தலைமையிடம் மற்றும் நிர்வாகம் அவர்களும் கலந்து கொண்டு, காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் பொதுமக்களிடம் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த அணுகுமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்து, தேவையான அறிவுரைகளை வழங்கினர்.

### இராணிப்பேட்டை மாவட்டத்தில்

## தேசிய நுகர்வோர் பாதுகாப்பு தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தின விழா கொண்டாட்டங்கள்

இராணிப்பேட்டை, செப்.7

தமிழ்நாடு அரசு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் வழிகாட்டுதலின்படி, இராணிப்பேட்டை மாவட்டத்தில் நுகர்வோர் விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையில் தேசிய நுகர்வோர் பாதுகாப்பு தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தினம் ஆகிய விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளன.

இதன் தொடர்ச்சியாக, நுகர்வோர் பாதுகாப்பு மற்றும்விழிப்புணர்வுதொடர்பான விழாவின் இறுதி நிகழ்வு வரும் 08.09.2026 அன்று காலை 11.00 மணி அளவில் வாலாஜா அறிஞர் அண்ணா அரசினர்மகளிர்கலைக்கல்லூரி



கூட்டரங்கில் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், நுகர்வோரின்உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்த விழிப்புணர்வு கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.

இதில் கல்லூரி மாணவ/மாணவிகள், நுகர்வோர் அமைப்பின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



கேரளா வாகன விபத்தில் உயிரிழந்த திண்டுக்கல் வாழைக்காயகய்பட்டியை சேர்ந்த கல்லூரி மாணவர் சூர்யா இல்லத்திற்கு நேரில் சென்று மாணவரின் பெற்றோர்க்கு திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் செந்தில் குமார் ஆறுதல் கூறினார்.

## சின்னமனூர் பூலாநந்தீஸ்வரர் கோவில் தெப்பக்குளத்தில் 108 அடியார்கள் பங்கேற்ற உழவாரப்பணி

தேனி,செப்.7

தேனி மாவட்டம் செப்பேடு புகழ்பெற்ற சின்னமனூர் (அரிகேசநல்லூர்) அருள்மிகு அன்னை ஸ்ரீ சிவகாமி தாயார் உடனுறை பூலாநந்தீஸ்வரர் திருக்கோவிலில், உலக சிவனடியார்கள் திருக்கூட்டம் தேனி மாவட்டம் சார்பில் திருக்கோவில் தெப்பக்குளம் சீரமைக்கும் உழவாரப் பணி சிறப்புற நடைபெற்றது.

இவ்வுழவாரப்பணிக்கு உலக சிவனடியார்கள் திருக்கூட்டத்தின் தேனி மாவட்ட தலைமை ஒருங்கிணைப்பாளர் கம்பம் சிவ.A.இராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். கம்பம் சிவமடம் சிவனடியார்கள் திருக்கூட்டத் தலைவர் சிவ.TSKP. ரமேஷ் முன்னிலை வகித்தார். மேலும் மாவட்ட இணை ஒருங்கிணைப்பாளர் கம்பம் திருமதி சிவ உமாமகேஸ்வரி குணசேகரன், உழவாரப்பணிக்குழு தலைமை மற்றும் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் வீரபாண்டி சிவ.மணிமுருகன், தர்மபுரி சிவ.பொன்னுச்சாமி, அனைப்பட்டி சிவ.ரமேஷ், உத்தமபாளையம் சிவ. செந்தில்செல்வம் மற்றும் மாவட்ட பொறுப்பாளர்கள் மார்க்கையன் கோட்டை சிவ.பழனிக்குமார் ஆகியோர் நிகழ்வை முன்னின்று ஒருங்கிணைத்தனர்.

இப்பணியில் கம்பம் இசைஞானியார் திருவாசகம் முற்றோதுதல் சிவனடியார்கள் திருக்கூட்டம், சின்னமனூர் சிவ.நல்லு ஐயா, திருநாவுக்கரசர் தேவாரம் பாடசாலை உறுப்பினர்கள் மற்றும் தேனி, கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், வீரபாண்டி, PC பட்டி, பெரியகுளம், போடி உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த சிவனடியார்கள் திரளாக கலந்து கொண்டனர். இவர்களுடன் சின்னமனூர் 'We the leaders' அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் உட்பட மொத்தம் 108 பேர் இணைந்து தெப்பக்குளத்தினை தூய்மைப்படுத்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.





இப்பணி சிறப்பாக நடைபெற அனுமதி வழங்கி ஒத்துழைப்பு நல்கிய இந்து சமய அறநிலையத்துறை திருக்கோவில் செயல் அலுவலர், திருக்கோவில் சிவாச்சாரியார்கள், கோவில் பணியாளர்கள் மற்றும் உழவாரப்பணியில் பங்கேற்ற அனைத்து நல்லுள்ளங்களுக்கும் உலக சிவனடியார்கள் திருக்கூட்டம் தேனி மாவட்டம் சார்பில் மனமார்ந்த நன்றியும் வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டது.

## நாரவாரிக்குப்பம் திருவிக தெரு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி ஆலயத்தில் 68ஆம் ஆண்டு ஆடிதிருவிழா





செங்குன்றம், செப்டம்பர் 07:

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி திருவிக தெரு அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி ஆலயத்தில் 68ஆம் ஆண்டு ஆடிதிருவிழா ஆலய பொறுப்பாளர்கள் பிரபாகரன், ராமன் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் காப்புகட்டுதல், பால்குடம் எடுத்தல், கூழ் வார்த்தல், கும்பம் படையல்பூஜை மற்றும் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது.

இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.

# ஆசிரியர்களுக்கு அச்சுறுத்தல் இன்றி, பணி பாதுகாப்பு உறுதிபடுத்த வேண்டும்

## மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரை கண்டித்து ஜாக்டோ சார்பில் ஆர்ப்பாட்டம்

ராணிப்பேட்டை, செப்.7

இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மோகனா என்பவரின் செயல்பாடுக





ளைக் கண்டித்து, ஆசிரியர் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு (ஜாக்டோ) சார்பில் 6 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை முத்துக்கடை பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட ஜாக்டோ ஒருங்கிணைப்பாளர்கள் சரவணன் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர் கூட்டு தலைமை தாங்கினர். இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மோகனா, மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களைத் தரக்குறைவாகப் பேசி, அச்சுறுத்தும் வகையில் நடந்துகொள்வதாகவும் நிர்வாகிகள் குற்றம்சாட்டினர். மேலும், "நான் சொல்வதை மட்டுமே செய்ய வேண்டும்" என்ற சர்வாதிகாரப் போக்கிலும், ஹிட்லர் பாணியிலும் மாவட்ட கல்வித்துறையை அவர் வழிநடத்த முயல்வதாகத் தெரிவித்தனர்.

ஆசிரியர்களின் கண்ணியத்தைக்குறைக்கும் வகையிலும், கல்விச் சூழலைப் பாதிக்கும் வகையிலும் செயல்படும்முதன்மைக்கல்வி அலுவலர் மோகனா மீது தமிழ்நாடு அரசும், பள்ளிக் கல்வித் துறையும் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் உட்பட 20 அம்ச ஆசிரியர் விரோத நடவடிக்கைகள் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக நிறுவன தலைவர் மாயவன் துவக்கி வைத்து பேசினார்.

அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் எழில் இளம்வழுதி, மாவட்ட செயலாளர். பர்சிலாவான சாஸ்திரி ஆகியோர் ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தி பேசினார்கள்.

தொடர்ந்து தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில பொருளாளர்நீலகண்டன், ஆசிரியர்முன்னேற்ற சங்க மாநில தலைவர் தியாகராஜன், ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில தலைவர் மணிமேகலை, முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழக மாநில பொதுச் செயலாளர் அன்பழகன், ஆசிரியர் கழக மாநில தலைவர். ஜெயக்குமார், தமிழாசிரியர் கழகம் மாநிலத் துணைச் செயலாளர் இராமமூர்த்தி உள்ளிட்ட சங்கத்தின் மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள் ஆகிய கண்டன உரையாற்றி முழக்கங்களை எழுப்பினர்.

# நல்லவம்பாளையம் ஏரியில் நள்ளிரவு வரை 'சீட்டாட்ட வேட்டை'

## போலீஸ் அதிரடி சோதனையில் 9 பேர் கைது; 4 பைக்குகள் பறிமுதல்

திருவண்ணாமலை, செப்.7

திருவண்ணாமலை அடுத்த நல்லவம்பாளையம் ஏரிப் பகுதியில் ரகசியமாக சீட்டாட்டம் நடைபெறுவதாக கிடைத்த தகவலையடுத்து, போலீசார் அதிரடியாக நடத்திய சோதனையில் 9 பேர் சிக்கினர். அவர்களிடமிருந்து 4 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி





யுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் சட்டவிரோத சூதாட்ட நடவடிக்கைகளை கண்காணித்து கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில், நல்லவம்பாளையம் ஏரியில் சிலர் கூட்டமாக அமர்ந்து சீட்டாட்டத்தில் ஈடுபட்டு வருவதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு ரகசிய தகவல் கிடைத்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து, டிஎஸ்பி தலைமையில் அமைக்கப்பட்ட தனிப்படை போலீசார், தகவல் கிடைத்த இடத்தை தீவிரமாக கண்காணித்தனர். பின்னர், நல்லவம்பாளையம் பகுதியில் உள்ள ஸ்ரீவாரி தாபா பின்புறம் அமைந்துள்ள ஏரி பகுதியில் அதிரடியாக புகுந்து சோதனை மேற்கொண்டனர்.

போலீசாரின் திடீர் வருகையை சற்றும் எதிர்பாராத நிலையில், அங்கு சீட்டு விளையாட்டில் ஈடுபட்டிருந்த 9 பேரும் சிக்கினர். அவர்களை போலீசார் சுற்றிவளைத்து கைது செய்தனர்.

மேலும், சம்பவ இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த 4 இருசக்கர வாகனங்களையும் போலீசார் பறிமுதல் செய்தனர். சீட்டாட்டம் தொடர்பாக பயன்படுத்தப்பட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மான்ராஜ், சுரேஷ், வெங்கடேசன், செல்லப்பன், சிவகுமார், கார்த்தி, முத்துக்குமரவேல், ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட 9 பேர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஏரி பகுதியில் தொடர்ந்து இதுபோன்ற சட்டவிரோத சீட்டாட்டங்கள் நடைபெறுகிறதா? இதில் மேலும் யாருக்காவது தொடர்பு உள்ளதா? என்பது குறித்தும் போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர். நல்லவம்பாளையம் ஏரியில் போலீசார் நடத்திய இந்த அதிரடி 'சீட்டாட்ட வேட்டை' அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



திண்டுக்கல் மாவட்டம் பழனியில் விஷ்வ ஹிந்து பரிஷத் சார்பில் கிருஷ்ண ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது இதில் குழுக்கள் முறையில் முதல் பரிசு பெற்ற கிருஷ்ணர்மற்றும்ராதைக்குமுதல்பரிசுரூபாய்10ஆயிரம்ரொக்கம்வழங்கப்பட்டது இவ்விழாவில் பழனி ஆதீனம் புலிப்பாணி பாந்தரை சுவாமிகள் மற்றும் கன்பத் கிரைண்ட் ஹோட்டல் உரிமையாளர் ஹரிஹர முத்து செந்தில் ஜி அவர்கள் வி தா லீடர்ஸ் கனகராஜ் இந்து முன்னணி ஜெகன் ஆடிட்டர் ஆனந்த சுப்பிரமணியம் அரிமா ஆனந்த பெருமாள் செந்தில் உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்







# செங்குன்றம் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஆலயத்தில் உரியடி திருவிழா

செங்குன்றம், செப்டம்பர் 07:

மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி பிடபிள்யூடி ஆபீஸ் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஆலயத்தில் 51ஆம் ஆண்டு கிருஷ்ண ஜெயந்தி உரியடித் திருவிழா ஆலய தலைவர் ஜி.சங்கர், செயலாளர் எஸ்.வடிவேலன், பொருளாளர் எஸ்.மோகன கிருஷ்ணன, நிர்வாகிகள் எம்.முரளி, பி.ரஜினி, கௌரவத் தலைவர்கள் என்.பாபு, என்.சி. செல்லதம்பி, சி.பன்னீர்செல்வம், பி.ராஜேந்திரன், எம்.முத்து, கௌரவ ஆலோசகர்கள் என்.ராதா, எம்.வி. புண்ணியசேகரன், டி.குமார் மற்றும் ஆலய நிர்வாகிகள், கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கொடிஏற்றுதல், பஞ்சஸூக்த ஹோமம், சூரண அபிஷேகம், பஞ்சஸூக்த ஹோமம், திருமஞ்சனம், ஸ்ரீ ஆதிராகவர் ஹோமம், சந்தான கோபால ஹோமம், திருவிளக்கு பூஜை, திருக்கல்யாண வைபவம், பின்னல் கோலாட்டம் மற்றும் மூலவர் சிறப்பு அபிஷேக அலங்கார தீபாராதனை நடைபெற்றது. பின்னர் உரியடி உற்சவம், பிரசாதம் வழங்குதல் போன்றவை நடைபெற்றது.

கேஎஸ்எம் குடும்பத்தினர் சார்பில் ஜி.குப்பன், ஜி.முனிகிரு ஷ்ணன், ஜி.சுப்பிரமணி மற்றும் செங்குன்றம் நெல் அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம் சார்பிலும், ஆலய நிர்வாகம் சார்பிலும் தொடர்ந்து மூன்று நாள்கள் தினந்தோறும் 1000த்திற்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது. இதில் ஆலய நிர்வாகிகள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# ஆற்காடு அருகே மாநில அளவிலான கராத்தே சாம்பியன்ஷிப் போட்டி

## 400க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

ராணிப்பேட்டை, செப்.7

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில், ஹிட்டோஷி ஷிட்டோரியூ கராத்தேடோ இந்தியா சங்கம் சார்பில் 2026





ஆம் ஆண்டுக்கான மாநில அளவிலான கராத்தே சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது.

இதில் மாவட்டம் முழுவதிலும் இருந்து ஜூனியர், சப்ஜூனியர் மற்றும் சீனியர் என பல்வேறு பிரிவுகளில் ஆண்கள் மற்றும் பெண்கள் என 400க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

போட்டிக்கு சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற தனபால் தலைமை வகித்தார். மற்றொரு சிறப்பு அழைப்பாளரான முனிராஜ் முன்னிலை வகித்தார். மேலும், முக்கிய சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்ற செண்பகராஜ் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர், போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கி பாராட்டி, ஊக்கப்படுத்தினர். இந்த போட்டிகளில் சிறப்பாக செயல்பட்டு வெற்றி பெறும் வீரர், வீராங்கனைகள், அடுத்தகட்டமாக இந்திய அளவில் நடைபெறும் கராத்தே போட்டிகளில் பங்கேற்க தேர்வு செய்யப்படுகின்றனர்.

நிகழ்ச்சியில் சர்வதேச தலைமை நடுவரான மணிவண்ணன் நடுவராக பங்கேற்று போட்டிகளை நடத்தினார்.

நிகழ்ச்சியில் போட்டியாளர்களின் குடும்பத்தினர், பொதுமக்கள் மற்றும் பல்வேறு கராத்தே பயிற்சி பள்ளிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி புறநகர் மாவட்டம் கருங்குளம் வடக்கு ஒன்றியத்தில் கட்சி வளர்ச்சிக்காக

# சிறப்பாக மக்கள் பணி செய்து வரும் வடக்கு ஒன்றிய செயலாளர் முத்துகிருஷ்ணனுக்கு மாவட்ட செயலாளரும் அமைச்சருமான மதன் ராஜா, தவெக 100 நாள் சாதனை பொதுக்கூட்டத்தில் சால்வை அணிவித்து பாராட்டினார்

தூத்துக்குடி செப். 7

தமிழக வெற்றி கழக தலைவரும் தமிழக முதலமைச்சருமான ஜோசப் விஜய் ஆணைக்கேற்ப தூத்துக்குடி புறநகர்மாவட்டம் சார்பில் ஓட்டப்பிடாரம் கனி மஹாலில் நடந்த தவெக 100.நாள் சாதனை கூட்டத்தில் கருங்குளம் வடக்கு ஒன்றியத்தில் தவெக சார்பில் சிறப்பாக மக்கள் பணி செய்து வரும் ஒன்றிய செயலாளர் முத்துகிருஷ்ணனுக்கு தூத்துக்குடி புறநகர் மாவட்ட செயலாளரும் சிறுகுறு தொழில் துறை அமைச்சரு மான மதன் ராஜா பாராட்டினார்.





கருங்குளம் வடக்கு ஒன்றியத்தில் தூத்துக்குடி புறநகர் மாவட்ட செயலாளரும் தமிழக சிறு குறு தொழில்துறை அமைச்சருமான மதன் ராஜா ஆலோசனை கேற்ப்ப விரைவில் வரஇருக்கின்ற உள்ளாட்சி மன்ற தேர்தலில் கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அனைத்து உள்ளாட்சி பதவிகளையும் தவெக சார்பில் கைப்பற்றும் வகையில் நிர்வாகிகளுடன் கருங்குளம் வடக்கு ஒன்றியத்துக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் சென்று கட்சி வளர்ச்சிக்கான பணிகளையும் மக்கள் நலப் பணிகளையும் சிறப்பாக செய்து வருகிறார் வடக்கு ஒன்றிய செயலாளர் முத்துகிருஷ்ணன் என்பது குறிப்பிடத்தக்கது

தூத்துக்குடி புறநகர் மாவட்டத்தின் சார்பில் நடைபெற்ற தவெக கட்சியின் 100 நாள் சாதனை பொதுக்கூட்டத்தில் கருங்குளம் வடக்கு ஒன்றியத்தில் இருந்து ஒன்றிய இணை செயலாளர் மாரியப்பன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை நிர்வாகிகள் கிளை கழக நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர்கள் வேன்களில் இரண்டு வந்து கூட்டத்தில் கலந்து கொண்டனர்

# கர்நாடகாவில் கொத்தடிமைத் தொழிலில் சிக்கிய 3 திருவண்ணாமலை தொழிலாளர்கள் மீட்பு

## சொந்த ஊர்களுக்கு அழைத்து வந்து குடும்பத்தினரிடம் ஒப்படைப்பு

திருவண்ணாமலை, செப்.7

கர்நாடக மாநிலத்தில் கொத்தடிமைத் தொழிலில் சிக்கித் தவித்த தமிழ்நாட்டைச் சேர்ந்த 31 தொழிலாளர்கள் மீட்கப்பட்டு தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர். இதில் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 3 தொழிலாளர்கள், மாவட்ட நிர்வாகத்தின் நடவடிக்கையின் மூலம் அவர்களது சொந்த கிராமங்களுக்கு அழைத்து வரப்பட்டு குடும்பத்தி னரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டனர்.




திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் அறிவுறுத்தலின் படி, மீட்கப்பட்ட தொழிலாளர்களை அவர்களது சொந்த ஊர்களுக்கு அழைத்துச் சென்று குடும்பத்தினரிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தண்டராம்பட்டு வட்டம், அகரம்பள்ளிப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த முருகன், கர்நாடக மாநிலம் சாம்ராஜ்நகர் மாவட்டம், அனூர் வட்டம், கங்கனதொட்டி கிராமத்தில் கரும்பு வெட்டும் விவசாயக் கூலி வேலை செய்து வந்துள்ளார். அப்போது அவர் நில உரிமையாளரால் கொத்தடிமையாக நடத்தப்பட்டு வந்தது கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, கர்நாடக மாநில வருவாய்த்துறையினர் அவரை மீட்டனர். பின்னர் வேலூர் தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர் மூலம் திருவண்ணாமலை வருவாய் கோட்ட அலுவலகத்திற்கு அழைத்து வரப்பட்ட முருகன், வருவாய் கோட்டாட்சியர் மேற்பார்வையில் அவரது சொந்த கிராமமான அகரம்பள்ளிப்பட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவரது உடன்பிறந்த அண்ணன், அக்கா மற்றும் உறவினர்கள் முன்னிலையில் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டார்.

இதேபோல், திருவண்ணாமலை வட்டம் நவம்பட்டு மதுரா, இருதயபுரம் கிராமத்தைச் சேர்ந்த அந்தோணிசாமியின் மகன் ஜான் போஸ்கோ (40), கர்நாடக மாநிலம் ராஜ்நகர் பகுதியில் கொத்தடிமையாக வேலை செய்து வந்த நிலையில் மீட்கப்பட்டார். அவர் திருவண்ணாமலைக்கு அழைத்து வரப்பட்டு அவரது தாயிடம் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டார். மேலும், போளூர் வட்டம் படியம்பட்டு மதுரா, பேட்டை கிராமத்தைச் சேர்ந்த அன்பழகன், கர்நாடக மாநிலம் ராமாபுரம் பகுதியில் கொத்தடிமைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டார். அவரை போளூருக்கு அழைத்து வந்த அதிகாரிகள், அரசு மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் அவரது வீட்டில் குடும்பத்தி னரிடம் ஒப்படைத்தனர். கர்நாடகாவில் சிக்கித் தவித்த தொழிலாளர்கள் மீட்கப்பட்டு மீண்டும் தங்களது குடும்பத்தினருடன் இணைந்த சம்பவம் உறவினர்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நடவடிக்கையின்போது திருவண்ணா மலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், திருவண்ணாமலை, போளூர் மற்றும் தண்டராம்பட்டு வட்டாட்சியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் கிராமத்தில் ஸ்ரீ கண்ணன் ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தி விழா





செங்குன்றம், செப்டம்பர் 07:

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் ஸ்ரீ கண்ணன் ஆலயத்தில் 29ஆம் ஆண்டு கிருஷ்ண ஜெயந்தி விழா ஆலய நிர்வாகிகள் தலைவர் தமிழரசன்,செயலாளர் ரமேஷ், பொருளாளர் ரமேஷ், துணைத்தலைவர் சீனிவாசன், துணை செயலாளர் ஜெகநாதன், கணக்கு தணிக்கையாளர்கள் சீனிவாசன், மணிகண்டன், ஆலய காப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் முத்து, பாலாஜி, பாபு,சதீஷ்,கார்த்திக், முத்து, கண்ணியப்பன், தர்மன்,பூங்காவனம், கார்த்திக் மற்றும் ஸ்ரீ கலைக்கண்ணன் இளைஞர்கள் நற்பணி மன்றத்தினர்கள், கிராம நிர்வாகிகள், முன்னாள் கிராம நிர்வாகிகள், முன்னாள் நல்லூர் ஊராட்சி நிர்வாகிகள் உட்பட கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் சுவாமிக்கு வெண்ணை மற்றும் இனிப்புடன் கூடியபடையல்பூஜையிட்டுதீபாராதனை காண்பிக்கப்பட்டது.

பின்னர் ஸ்ரீ கலைக்கண்ணன் நற்பணி மன்றம் சார்பில் உரியடித்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் ஸ்ரீ கண்ணன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது.

மேலும் இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.

### அபிஷேக தரிசனம் காண வந்த பக்தர் திடீர் மரணம்:

# கோயில் வளாகத்திலேயே மூச்சுத்திணறல், மருத்துவமனைக்கு கொண்டு சென்றும் பலனின்றி உயிரிழப்பு

## பக்தர்கள் பாதுகாப்பு குறித்து எழும் கேள்விகள்

திருவண்ணாமலை, செப்.7

திருவண்ணாமலை அண்ணாமலையார்கோயிலில் அபிஷேக தரிசனம் காண வந்த 68 வயது பக்தர் திடீரென மூச்சுத்திணறலால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சம்பவம் பக்தர்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருவண்ணாமலை அண்ணாமலையார்கோயிலுக்கு தினந்தோறும் தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். குறிப்பாக அபிஷேக பூஜை மற்றும் சிறப்பு தரிசனங்களின்போது கோயில் வளாகத்தில் பக்தர்கள் கூட்டம் அதிகரிப்பது வழக்கம்.

இந்த நிலையில், சென்னையைச் சேர்ந்த ரவிசங்கர் (68) என்பவர் நேற்று முன்தினம் மாலை அண்ணாமலையார் கோயிலில் நடைபெற்ற அபிஷேக பூஜையில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்துள்ளார். பின்னர் கோயிலில் இருந்து வெளியே வந்தபோது அவருக்கு திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இதையடுத்து கோயில் பணியாளர்கள் மற்றும் அவரது உறவினர்கள் அவரை மீட்டு, கோயில் வளாகத்தில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

தொடர்ந்து மேல் சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு மருத்துவர்கள் மேற்கொண்ட பரிசோதனையில், ரவிசங்கர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். அவர் ஏற்கனவே உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்ததாக கூறப்படும் நிலையில், சம்பவம் தொடர்பாக அவரது உறவினர்கள் புகார் அளிக்காமல் உடலைப் பெற்றுச் சென்றதாக தெரிகிறது.

பக்தர்கள் பாதுகாப்பு குறித்து எழும் கேள்விகள் பக்தர் ஒருவர் கோயிலில் சாமி தரிசனம் செய்துவிட்டு வெளியே வந்த போது மூச்சுத்திணறலால் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், அண்ணாமலையார் கோயிலில் நடைபெறும் அபிஷேக பூஜைகளில் அதிகளவில் பக்தர்கள் ஒரே நேரத்தில் அமர வைக்கப்படுவதாக நீண்டகாலமாக குற்றச்சாட்டு எழுந்து வருவதாக பக்தர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

குறிப்பாக வயதானவர்கள் மற்றும் உடல்நலப் பிரச்சினை உள்ளவர்கள் நீண்ட நேரம் கூட்ட நெரிசலான இடங்களில் அமர வேண்டிய சூழல் ஏற்படுவதாகவும், அவசர மருத்துவ உதவி தேவைப்படும் நேரங்களில் உடனடியாக வெளியே அழைத்துச் செல்ல போதிய இடவசதி இருக்க வேண்டும் என்றும் பக்தர்கள் வலியுறுத்துகின்றனர். எனவே, பக்தர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, சுவாமி சன்னதி மற்றும் அம்மன் சன்னதிகளில் நடைபெறும் அபிஷேக பூஜைகளுக்கு இடவசதிக்கு ஏற்ற எண்ணிக்கையில் மட்டுமே பக்தர்களை அனுமதிக்க வேண்டும் என்றும், அவசர மருத்துவ உதவிக்கான ஏற்பாடுகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்றும் பக்தர்கள் கோரிக்கை விடுத்து ள்ளனர். பக்தர்களின் உயிர் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளித்து கோயில் நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்குமா? என்பதே தற்போது பக்தர்கள் மத்தியில் எழுந்துள்ள முக்கிய எதிர்பார்ப்பாக உள்ளது.





### தீர்த்தக்கிரியம்பட்டு ஸ்ரீ சிவசக்தி செல்வ விநாயகர் ஆலயத்தில் மஹா கணபதி ஹோமம் 108 சங்காபிஷேகம் விழா

செங்குன்றம், செப்டம்பர் 07:

மாதவரம்தொகுதிபுழல் ஒன்றியம் தீர்த்தக்கிரிய ம்பட்டு ஊராட்சி சேரன் தெரு அருள்மிகு ஸ்ரீ சிவ சக்தி செல்வ விநாயகர் ஆலயத்தில்32Mம்ஆண்டு சதுர்த்தி திருவிழாவை முன்னிட்டு மஹாகணபதி ஹோமம் மற்றும் 108 சங்காபிஷேகம் விழா ஆலய தர்மகர்த்தா ஆர்.சக்திமோகன் ஏற்பாட்டில் மற்றும் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் உலகமக்கள் நன்மைகள் வேண்டி குருக்களின் மூலமந்திரங்கள் முழங்க மஹா கணபதி ஹோமம் நடைபெற்றது.

பின்னர் மேளதாளத்துடன் அருள்மிகு ஸ்ரீ சிவசக்தி செல்வ விநாயகருக்கு 108 சங்காபிஷேகம் மற்றும் புனித கலச நீர் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இவ்விழாவிற்கு ஆலய நிர்வாகிகள்,சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.

முடிவில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.

# பழனி அருகே தொப்பம்பட்டியில் தமிழக வெற்றிக் கழக அரசின் 100 நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டம்

### மாணவர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள தொப்பம்பட்டியில், திண்டுக்கல் மேற்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் தமிழக வெற்றிக் கழக அரசின் 100 நாள் சாதனைகளை விளக்கும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் பள்ளிப் படிப்பில் சிறந்த மதிப்பெண்கள்பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டதுடன், பொதுமக்களுக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

தொப்பம்பட்டி ஒன்றியத்துக்கு உட்பட்ட தொப்பம்பட்டியில்நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் முகமது அலி ஜின்னா ஏற்பாடு செய்திருந்தார். நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழக அரசின் 100 நாள் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பள்ளிகளில் சிறந்த மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்த மாணவ, மாணவிகள் கவுரவிக்கப்பட்டனர். அவர்களின் கல்வி முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. மேலும், பொதுமக்களின் தேவையை கருத்தில் கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக திண்டுக்கல் மேற்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழக செயலாளர் கார்த்திக் ராஜா கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அப்போது அவர், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு முக்கியத்து வம் அளிக்க வேண்டும் என்றும், சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தேவையான உதவிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர் பழனி பாலன், நாகராஜ், தொப்பம்பட்டி ராஜ்குமார், மாரி, வர்த்தக அணி பொறுப்பாளர் இக்பால் தீன், தக்வா சேட், மயூரா முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், தொப்பம்பட்டி ஒன்றியத்திற்கு உட்பட்ட பொறுப்பாளர்கள், தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். மாணவர்களை கவுரவித்து ஊக்கத்தொகை வழங்கியதும், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதும் அப்பகுதி மக்களிடையே வரவேற்பைப் பெற்றது.









# திவ்யா எஜுகேஷனல் அண்ட் சாரிட்டபிள் டிரஸ்ட், கேரியர் குயின்ஸ் மற்றும் சூப்பர் ஸ்டார் அகாடமி இணைந்து பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த 180 பேருக்கு வெற்றி நாயகி விருது

செங்குன்றம், செப்டம்பர் 07:

திவ்யா எஜுகேஷனல் அண்ட் சாரிட்டபிள் டிரஸ்ட், கேரியர் குயின்ஸ் மற்றும் சூப்பர் ஸ்டார் அகாடமி இணைந்து பல்வேறுதுறைகளில்சாதனை புரிந்த மகளிர்களுக்கு வெற்றி நாயகி விருது வழங்கும் விழா இரண்டு கட்டமாக சூப்பர் ஸ்டார் அகாடமியின் நிறுவனரும் முதல்வருமான டாக்டர் பி.உமாமகேஸ்வரி தலைமையில் சென்னை சேத்துப்பட்டு சிந்தி மாடல் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. சி. மஞ்சுளா, உமா மகேஸ்வரி ஆகியோர் வரவேற்க, சூப்பர் ஸ்டார் அகாடமி தாளாளர் ஆர்.நாகலிங்கம், துணைமுதல்வர் பி.ஜெயலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக பெமி 9 நிறுவனரும், பங்குதாரருமான டாக்டர் வி. கோமதி, செல்வகுமாரி கன்ஸ்ட்ரக்‌ஷன்ஸ் உரிமையாளர் தேவி பாலாஜி, ஆத்திசூடி இன்டர்நேஷ்னல் பள்ளி நிர்வாக இயக்குநர் ஜெயசுதா, சேப்கேன்ஸ் ரியாலட்டர் மற்றும் ஹெச்எம்எஸ் டேலன்ட் போர்ஜி நிறுவனரும் இயக்குருமான எஸ்.எஸ். ஸ்ரீராம், ஆத்திசூடி இன்டர்நேஷ்னல் பள்ளி முதன்மை நிர்வாக அதிகாரி பூர்ணிமா சந்திரன் பிரபு, அகில இந்தியப் போட்டியில் 2வது இடம் பெற்ற விளையாட்டு வீராங்கனை பூங்கொடி, சுபா வைபவம் மேட்ரிமோனி சர்வீசஸ் அண்ட் ஈவெண்ட்ஸ் உமாலட்சுமிராம், எம்பயர் குரூப்ஸ் தலைவர் பிரேமானந்த் பிரபு கலந்து கொண்டு 180க்கும் மேற்பட்டோருக்கு வெற்றி நாயகி விருது வழங்கி பாராட்டி வாழ்த்தினர்.

புஷ்பா பசுபதி, ஜான்வி ஆகியோர் அனைவருக்கும் நன்றி கூறினர். இந்நிகழ்ச்சியில் சூப்பர் ஸ்டார் அகாடமியின்நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# உடன்குடி அனல் மின் நிலையத்தில் வணிக ரீதியான உற்பத்தி தொடக்கம்

உடன்குடி அனல் மின்நிலையம் வணிக ரீதியான 660 மெகாவட் முழு மின் உற்பத்தியை தொடங்கியது என மின் வாரியம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மின் வாரியம் வெளியிட்ட அறிக்கை: தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் ரூ.13,076 கோடி மதிப்பீட்டில் தலா 660 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அலகுகளுடன் அனல் மின்நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. கடந்த மார்ச் 13ம் தேதி உடன்குடி மிக உய்ய அனல் மின்நிலையம் (2x660 MW) அலகு 1ல் மின் உற்பத்தியை தொடங்கியது. தினமும் 300 முதல் 400 மெகாவாட் வரை மின் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

உடன்குடி அனல் மின்நிலை யத்தில் அலகு 1ல் வணிக ரீதியான 660 மெகாவாட் முழு மின் உற்பத்தியை விரைவில் கொண்டு வர முதல்வர் உத் தரவிட்டார். அதன் அடிப்படை யில் உடன்குடி (660 மெகா



வாட்) அனல் மின் நிலையம் அலகு 1ல் வணிக ரீதியான முழு மின்உற்பத்தி அடைய பல்வேறு சோதனை ஓட்டங்கள் நடத்தப்பட்டன. 72 மணி நேரம் முழு உற்பத்தி:

இதை தொடர்ந்து அலகு 1ல் வணிக ரீதியான சோதனை உற்பத்திக்கான தொடர் முழு உற்பத்தி திறன் ஆய்வு சோதனை ஓட்டம் கடந்த 2ம் தேதி மாலை 04.16 மணி முதல் நேற்று (5ம் தேதி) மாலை 04.15 வரை வெற் றிகரமாக நடத்தப்பட்டு தொடர்ச்சியாக 72 மணி நேரம் முழு உற்பத்தியான 660 மெகாவாட் மின்உற்பத்தி செய்து சாதனைபடைத்தது. இந்த சாதனை மைல்கல்லை தொடர்ந்து,

இந்த அனல் மின் நிலையம் அலகு 1ல் நேற்று மாலை முதல் 660 மெகா வாட்டுக்கு மேல் வணிக ரீதியாக முழு மின் உற்பத்திக்கு கொண்டுவரப்பட்டது. மேலும், உடன்குடி அனல் மின் நிலை யம் அலகு 2ல் கட்டுமான வேலைகள் மிக துரிதமாக நடை பெற்று வருகிறது. விரைவில் மின்உற்பத்தியை தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அதில் கூறப்பட் டுள்ளது.

### கல்விப்பணியில் முத்திரை பதித்த சிஷ்யாமெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர்:

# த. பட்டுரேவதிக்கு 2026ம் ஆண்டுக்கான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது

திருவண்ணாமலை, செப். 7

திருவண்ணாமலை அடுத்த இனாம்காரியந்தல் பகுதியில் செயல்பட்டு வரும் சிஷ்யா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் முதல்வர் த. பட்டுரேவதி, கல்வித்துறையில் சிறப்பாகப் பணியாற்றி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், பள்ளியின் முன்னேற்றத்திற்கும் ஆற்றிய சிறப்பான பங்களிப்பை பாராட்டி, தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித்துறை சார்பில் வழங்கப்படும் 2026ம் ஆண்டுக்கான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



ஆசிரியர் தினத்தை முன்னிட்டு சென்னையில் பள்ளிக்கல்வித்துறை செயலாளர் சந்திரமோகன் தலைமையில் நடைபெற்ற விழாவில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் சி.அ.முருகன், த. பட்டுரேவதிக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன்விருதைவழங்கி பாராட்டினார்.

கல்வி கற்பித்தல் மட்டுமின்றி, மாணவர்களின் தனித்திறன் வளர்ப்பு, ஒழுக்கம், கல்வித் தர மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு பணிகளில் தொடர்ந்து சிறப்பான பங்களிப்பை வழங்கி வரும் முதல்வர் த. பட்டுரேவதியின் அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. தனது கல்விப் பணிக்காக அரசு வழங்கியுள்ள இந்த உயரிய விருது, சிஷ்யா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி நிர்வாகம், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விருது பெற்ற முதல்வர் த. பட்டுரேவதிக்கு பள்ளி நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

விழாவில் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் லயோலா மணி, பள்ளிக் கல்வி இயக்குநர் லதா, தொடக்கக் கல்வி இயக்குநர் நரேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல்லில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரி மாணவர்கள் ஜோஸ்வா ஹில்சன், முரளி கிருஷ்ணன், பிரசன்னா, யுவசஞ்சித், ஜீவா, விஷ்வா, சூர்யா, சந்தோஷ் ஆகியோர் கேரள மாநிலம் திருச்சூரில் விபத்தில் உயிரிழந்த செய்தி வேதனை அளிக்கிறது. உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்



திண்டுக்கல் மாவட்டம் பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவில் செப்டம்பர் 12 முதல் ரோப் கார் சேவை மீண்டும் தொடக்கம்

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA